## விருதுநகர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர் : திருமதி.இரா.சாந்தா, B.Sc.,
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்,
இடம் : விருதுநகர்.

**செயல்முறை ஆணை எண் அ1/1285/2020 நாள் 05.07.2021**

பொருள்: பணியமைப்பு - வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை - வேலைவாய்ப்புப் பிரிவு - நேரடி நியமனம் - தமிழ்நாடு 0அமைச்சுப் பணி - தொகுதி-IV பணிகள் - 2013-2014 மற்றும் 2014-2015-ஆம் ஆண்டுக்கான இளநிலை உதவியாளர் பதவிக்கான பட்டியல் பெறப்பட்டது - சார்நிலை அலுவலகங்களுக்கு ஒதுக்கீடு செய்தல் - திரு.பூ.பாரதிராஜன், இளநிலை உதவியாளர் என்பவர் நாகர்கோவில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டமை – பணிமாறுதல் மூலம் இவ்வலுவலகத்திற்கு மாற்றப்பட்டமை - பணி வரன்முறை செய்து ஆணை பிறப்பித்தல் - தொடர்பாக.

பார்வை:
1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக் கடிதம் எண் 1334/PSD-G1/2019 நாள்: 18.02.2019
2. இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அவர்களின் செ.மு.ஆ.எண் நிர்.2/3662/2019 நாள் 04.03.2019
3. நாகர்கோவில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண் அ1/688/2019 நாள்: 05.03.2019
4. இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அவர்களின் செ.மு.ஆ.எண் நிர்.2/8534/2020 நாள் 22.07.2020
5. திரு.பூ.பாரதிராஜன், இளநிலை உதவியாளர், பணியேற்பு விண்ணப்பம் நாள்: 03.08.2020

*******

**ஆணை :**

பார்வை (1) இல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையக் கடிதம் மூலமாக வேலைவாய்ப்புத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை (2) இல் காணும் இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அவர்களின் செயல்முறை ஆணைகள் மற்றும் பார்வை (3) இல் காணும் நாகர்கோவில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக உதவிஇயக்குநர் அவர்களது செயல்முறை ஆணைகளின்படி திரு.பூ.பாரதிராஜன், நாகர்கோவில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 02.05.2019 அன்று முற்பகல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்தார். அதனைத் தொடர்ந்து, பார்வை (4) இல் காணும் இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அவர்களின் செயல்முறை ஆணை வாயிலாக சொந்த விருப்பத்தின் பேரில், அதே நிலையில் பணியிட மாற்றம் செய்யப்பட்டு 03.08.2020 முதல் நாளது தேதி வரை விருதுநகர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார்.

-த.பி.பா.-

Scanned by CamScanner

அதனைத் தொடர்ந்து, திரு.பூ.பாரதிராஜன், இளநிலை உதவியாளர் அவர்களது பணி, இவர் பணியில் சேர்ந்த நாளான 02.05.2019 முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறைப்படுத்தப்படுகிறது.

இவர் தனது ஓராண்டுப் பணிக்காலத்தை 01.05.2020 பிற்பகல் நிறைவு செய்தார். திரு.பூ.பாரதிராஜன், இளநிலை உதவியாளர் அவர்கள் அவர் பணியில் சேர்ந்த நாளான 02.05.2019 முற்பகல் முதல் தொடர்ச்சியான 3 ஆண்டுகளுக்குள் 2 ஆண்டு காலத்திற்கு (He is placed under probation for two years in the continuous period of three years) நிபந்தனைக்குட்பட்டு தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார்.

இச்செயல்முறை ஆணைகளைப் பெற்றமைக்கான ஒப்புகை உடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

5/7/21

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்
விருதுநகர்.

5/7/21 5/7/21

பெறுநர்

திரு.பூ.பாரதிராஜன்,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்,
விருதுநகர்.

நகல்

1. பணிப்பதிவேடு
2. இருப்புக் கோப்பு-35

Scanned by CamScanner